**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No:201/2024**

**Deposition of Witnesses for PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஒண்டிவீரண் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 20.11.2025

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் கிழக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.07.2024 ம் தேதி 14.30 மணிக்கு சாத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த போது சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வக்குமார் அவர்களுடன் நான் மற்றும் சுந்தர் ராஜன் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் படி இவ்வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் காவல் நிலையத்தில் இருந்து புறப்பட்டு சம்பவ இடமான விருதுநகர் ரோசல் பட்டி திரவிய பகுதியில் போதை பொருள் சம்மந்தமாக கண்காணித்த போது 15.30 மணிக்கு எதிரி சூர்யாவின் வீட்டின் அருகே சென்ற போது சூர்யாவும் மற்றும் விஜய் என்ற கருப்பசாமியும் அவர்கள் வீட்டின் முன்பாக நின்றவர்கள் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து நாங்கள் எங்களது அடையாள அட்டையை காட்டி போலீசார் என சுய அறிமுகம் செய்து கொண்டோம். பின்பு எதிரிகளிடம் விசாரித்தும் சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வக்குமார் எதிரிகளிடம் அவரிடத்தில் எதிரி கஞ்சா வைத்திருப்பதாக வந்த தகவலை அவருக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் எதிரிகளிடம் எடுத்து கூறினார் அது வகைக்கு எதிரிகளிடம் சோதனையிட வேண்டி அருகில் உள்ள

நீதித்துறை நடுவர் அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரியின் முன்பு சோதனை இடுமாறு கோர எதிரிக்குள்ள உரிமையை காவல் உதவி சிறப்பு ஆய்வாளர் எடுத்துக்கூறினார். அதற்கு எதிரிகள் தங்களால் அங்கே எல்லாம் வர முடியாது என்றும் நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னார்.அதன் பேரில் என்னையும் தலைமை காவலர் 2992 சுந்தர்ராஜன் சாட்சியாக நியமித்து அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் இல்லாததால் எங்களை சாட்சியாக நியமித்து காலை 15.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து எதிரிகளுக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் சார்பு செய்தார். அந்த சோதனை சம்மத கடிதத்தில் SSIசெல்வக்குமார் , எதிரியும் கையொப்பம் செய்தார்கள் . பின்பு எதிரியை சோதனை செய்த போது அவர் வைத்திருந்த 4 கவர்களை வாங்கி காவல் சிறப்பு சார்பு ஆய்வாளர் சோதனை செய்தார். அந்த கவர்களில் கஞ்சா இருந்தது அந்த கவர்களை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தோம் அந்த கஞ்சா பொட்டலத்தின் எடை 10.300 கி.கி இருந்தது. அந்த கவரை பிரித்து பார்த்தபோது அதில் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா இருந்தது. பின்னர் மொத்த கஞ்சாவை வெள்ளை நிற சாக்குபையில் வைத்து கட்டி SHO சீல் வைத்து அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும் உள்ளார், அதற்கான அத்தாட்சியில் நானும் , சுந்தராஜன், எதிரிகளும், SSI செல்வக்குமார் கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரிகளை சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக 16.15 மணிக்கு எதிரிகளுக்கு தனித்தனியாக கைது அறிவிப்பு கொடுத்தார். அந்த கைது அறிவிப்புகளில் நானும், சுந்தராஜனும் கையொப்பம் செய்தோம். பின்னர் SSI யிடம் 2ம் எதிரி சூர்யா தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்பு எதிரிகளுடன் காவல் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யஉதவியாக இருந்தேன்.அத்தாட்சி **அ.த.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.கைது நமுனாகள் **அ.த.சா.ஆ 2,3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் **அ.த.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விபரம் சென்னேன்.

_

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு தகவல் வந்தவுடன் VAO மற்றும் தலையாரி, தனிநபர் சாட்சிகள் யாரையும் சம்பவ இடத்திற்கு அழைத்துச்செல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீட்டின் கதவு எண் எந்த ஆவணத்திலும் குறித்தீர்களா என்றால் குறித்தோம் அந்த எண் என்ன என்று கேட்டால் தற்சமயம் ஞாபகம் இல்லை என சாட்சி சொல்கிறார்.நான் கையொப்பம் செய்த ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். ஆவணங்களின் அது என்ன வகை வீடு என சொல்லப்பட்டிருந்ததா என்றால் ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது. எந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரது வீடு மாடி வீடு என குறிப்பிட்டுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மாடி வீடு என 4ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி, கைது அறிப்பு , ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் செல்வக்குமார் எழுதினார். நானோ என்னுடன் வந்த மற்ற காவலர்களோ ஆவணங்கள் எழுதவில்லை என்றால் நான் எழுதவில்லை .அத்தாட்சியில் எந்த எதிரியின் வீட்டின் முன்பகுதியில் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்ற குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு இல்லை.SHO சீல் மாதிரி ஏதும் மகஜரில் இல்லை என்றால் சரிதான். கைது அறிவிப்பில் எவ்வளவு பொருள் வைத்திருந்தார் எந்த சட்டப்பிரிவு படி எதிரி கைது செய்யப்பட்டார் என்ற குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு இல்லை.என்னை ஆய்வாளர் விசாணையின் போது சோதனை சம்மத கடிதத்தில் எதிரியிடமும் சாட்சிகளிடமும் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சோதனை சம்மத கடிதத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 16.15 மணிக்கு தயார் செய்யப்பட்டது. எதிரிகளுக்கு கைது அறிவிப்பு கொடுக்கப்பட்ட நேரம் எத்தனை மணிக்கு என்றால் 16.15 மணிக்கு கொடுக்கப்பட்டது.மாதிரிகள் எடுக்கப்பட்ட பொட்டலங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் இல்லை. அதே போல் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சிறப்பு சார்பு ஆய்வாளர் சீல் மற்றும் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.பொட்டலங்களில் ஆய்வாளர் சீல் உள்ளது என்றால் சரிதான் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வரவில்லை

என்றால் சரிதான். பொட்டலங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவை எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் அது தற்போது ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளிடம் இருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரிகளின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது1ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல அதற்காக வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No:201/2024**

**Deposition of Witnesses for PW2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுந்தர் ராஜன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 20.11.2025

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் கிழக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.07.2024 ம் தேதி 14.30 மணிக்கு சாத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த போது சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வக்குமார் அவர்களுடன் நான் மற்றும் ஒண்டிவீரன் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் படி இவ்வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் காவல் நிலையத்தில் இருந்து புறப்பட்டு சம்பவ இடமான விருதுநகர் ரோசல் பட்டி திரவிய பகுதியில் போதை பொருள் சம்மந்தமாக கண்காணித்த போது 15.30 மணிக்கு எதிரி சூர்யாவின் வீட்டின் அருகே சென்ற போது சூர்யாவும் மற்றும் விஜய் என்ற கருப்பசாமியும் அவர்கள் வீட்டின் முன்பாக நின்றவர்கள் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து நாங்கள் எங்களது அடையாள அட்டையை காட்டி போலீசார் என சுய அறிமுகம் செய்து கொண்டோம். பின்பு எதிரிகளிடம் விசாரித்தும் சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வக்குமார் எதிரிகளிடம் அவரிடத்தில் எதிரி கஞ்சா வைத்திருப்பதாக வந்த தகவலை அவருக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் எதிரிகளிடம் எடுத்து கூறினார் அது வகைக்கு எதிரிகளிடம் சோதனையிட வேண்டி அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரியின் முன்பு சோதனை இடுமாறு கோர எதிரிக்குள்ள உரிமையை காவல் உதவி சிறப்பு

ஆய்வாளர் எடுத்துக்கூறினார். அதற்கு எதிரிகள் தங்களால் அங்கே எல்லாம் வர முடியாது என்றும் நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னார்.அதன் பேரில் என்னையும் தலைமை காவலர் ஒண்டிவீரன் சாட்சியாக நியமித்து அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் இல்லாததால் எங்களை சாட்சியாக நியமித்து காலை 15.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து எதிரிகளுக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் சார்பு செய்தார். அந்த சோதனை சம்மத கடிதத்தில் SSIசெல்வக்குமார் , எதிரியும் கையொப்பம் செய்தார்கள் . பின்பு எதிரியை சோதனை செய்த போது அவர் வைத்திருந்த 4 கவர்களை வாங்கி காவல் சிறப்பு சார்பு ஆய்வாளர் சோதனை செய்தார். அந்த கவர்களில் கஞ்சா இருந்தது அந்த கவர்களை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தோம் அந்த கஞ்சா பொட்டலத்தின் எடை 10.300 கி.கி இருந்தது. அந்த கவரை பிரித்து பார்த்தபோது அதில் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா இருந்தது. பின்னர் மொத்த கஞ்சாவை வெள்ளை நிற சாக்குபையில் வைத்து கட்டி SHO சீல் வைத்து அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும் உள்ளார், அதற்கான அத்தாட்சியில் நானும் , ஒண்டிவீரன், எதிரிகளும், SSI செல்வக்குமார் கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரிகளை சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக 16.15 மணிக்கு எதிரிகளுக்கு தனித்தனியாக கைது அறிவிப்பு கொடுத்தார். அந்த கைது அறிவிப்புகளில் நானும், ஒண்டிவீரன் கையொப்பம் செய்தோம். பின்னர் SSI யிடம் 2ம் எதிரி சூர்யா தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்பு எதிரிகளுடன் காவல் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யஉதவியாக இருந்தேன்.அத்தாட்சி அ.த.சா.ஆ 1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது .கைது நமுனாகள் அ.த.சா.ஆ 2,3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் அ.த.சா.ஆ 4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விபரம் சென்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு தகவல் வந்தவுடன் VAO மற்றும் தலையாரி, தனிநபர் சாட்சிகள் யாரையும் சம்பவ இடத்திற்கு அழைத்துச்செல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீட்டின் கதவு எண் எந்த ஆவணத்திலும் குறித்தீர்களா என்றால் குறித்தோம் அந்த எண் என்ன என்று கேட்டால் தற்சமயம் ஞாபகம் இல்லை என சாட்சி சொல்கிறார்.நான் கையொப்பம் செய்த ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். ஆவணங்களின் அது என்ன

வகை வீடு என சொல்லப்பட்டிருந்ததா என்றால் ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது. எந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரது வீடு மாடி வீடு என குறிப்பிட்டுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மாடி வீடு என 4ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி, கைது அறிப்பு , ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் செல்வக்குமார் எழுதினார். நானோ என்னுடன் வந்த மற்ற காவலர்களோ ஆவணங்கள் எழுதவில்லை என்றால் நான் எழுதவில்லை .அத்தாட்சியில் எந்த எதிரியின் வீட்டின் முன்பகுதியில் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்ற குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு இல்லை.SHO சீல் மாதிரி ஏதும் மகஜரில் இல்லை என்றால் சரிதான். கைது அறிவிப்பில் எவ்வளவு பொருள் வைத்திருந்தார் எந்த சட்டப்பிரிவு படி எதிரி கைது செய்யப்பட்டார் என்ற குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு இல்லை.என்னை ஆய்வாளர் விசாணையின் போது சோதனை சம்மத கடிதத்தில் எதிரியிடமும் சாட்சிகளிடமும் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சோதனை சம்மத கடிதத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 16.15 மணிக்கு தயார் செய்யப்பட்டது. எதிரிகளுக்கு கைது அறிவிப்பு கொடுக்கப்பட்ட நேரம் எத்தனை மணிக்கு என்றால் 16.15 மணிக்கு கொடுக்கப்பட்டது.மாதிரிகள் எடுக்கப்பட்ட பொட்டலங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் இல்லை. அதே போல் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சிறப்பு சார்பு ஆய்வாளர் சீல் மற்றும் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.பொட்டலங்களில் ஆய்வாளர் சீல் உள்ளது என்றால் சரிதான் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். பொட்டலங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவை எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் அது தற்போது ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளிடம் இருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரிகளின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது1ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல அதற்காக வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர்

அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai